Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கரவருஷ ஐப்பசிமீ ௨ உ வெள்ளிக்கிழமை (19 அக்டோபர் 1951) [இல.-௩௪]

# திருவடி

[குடந்தை ஸ்ரீ மங்களாம்பிகா நூல் நிலையத்தில் தருமபுர ஆதீனத்து 25-வது மகாசந்நிதானம் நிகழ்த்திய அருளுரை]

III

ஒரு கதை: ராஜகுமாரன் இளமைப் பிலேகாட்டில் வேடர் கூட்டத்திலே சிக்கிக்கொண்டான்! அவர்களைப் போலவே உண்ண - உடுக்கப் பழகிக்கொண்டான். தான் ஒரு அரசகுமாரன் என்பதை அறியாமலே கடந்து வந்தான். அவனை ஒரு அரசன் 'அப்பா, நீ ராஜகுமாரன், அவர்கள் எல்லாம் வேடர்கள். நீ அவர்களோடு இப்படிக் கூடியிருக்கக்கூடாது' என்று உண்மையைத் தெரிவித்தான். ராஜகுமாரன் அது முதற்கொண்டு தன்னுடைய உண்மைத் தன்மையை உணர்ந்து ராஜகுமாரனாகவே விளங்கினான். அந்த ராஜகுமாரன் யார்? நீங்களும் நாங்களுமாகிய உயிர்கள். வேடர்கள் யார்? நம்முடைய தோல், கண், காது, மூக்கு, நாக்கு ஆகிய பஞ்சேந்திரியங்கள். இவைகளின் சேர்க்கையால் நாம் எப்படி எல்லாம் அலைக்கப் படுகின்றோம். இப்படி அலைகிற நம்மைப் பார்த்து ஆண்டவனே குருவாக வந்து "நீ நல்ல ஞானம் உடையவன். சகவாசத்தால் கெட்டுப்போனாய்; திருந்தி நடந்துகொள்; உன்னுடைய பெருமை மிக உயர்ந்தது" என்று உணர்த்தியவுடன் சிவஞானம் பெற்ற செம்மலாக ஆகிவிடுகிறோம். இந்த நிலையை அறிவிக்கும் சூத்திரத்தைப் பாருங்கள்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை
வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தி
னுணர்த்தவிட்டு [னில்
அந்நியம் இன்மையின்
அரன்கழல் செலுமே"

இது முதல் நூல். அப்படியே விரிவுரை மாதிரியாக சித்தியார் சொல்லுகிறது; அதனையும் பாருங்கள்

"மன்னவன் தன் மகன்
வேடரிடத்தே தங்கி
வளர்(ந்து) அவனை அறியாது
மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ
என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப்
பேணுமாபோல்
துன்னிய ஐம்புலவேடர்
சுழலிற்பட்டுத்
துணைவனையும் அறியாது
துயருறும் தொல் உயிரை
மன்னும் அருட்குருவாகி
வந்(து) அவரின் நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி
மலரடிக்கீழ் வைப்பன்"

இப்படித் தோத்திர சாத்திரங்களால் திருவடியின் முழுத் தன்மை பேசப்படுகின்றன. அடியார்களாகிய நீங்களும், குருஞானசம்பந்தர் அருள்பெற்ற நாமும் கலந்த இந்த நிலையை எண்ணும்போது நமது சேக்கிழார் பெருமான் சொன்னது ஞாபகம் வருகிறது.

தமிழிலே வேதங்களைச் சொன்ன திருஞான சம்பந்தப் பெருமான் எழுந்தருளியிருக்கின்ற சீகாழித் திருப்பதிக்குப் பக்கத்திலே திருநாவுக்கரசர் வருகிறார். ஞானசம்பந்தப் பெருமான் எதிர்கொண்டழைக்கின்றார். திருநாவுக்கரசர் எப்படிப்பட்டவர்? சிவபெருமானாலேயே சூலைநோய் கொடுத்து ஆண்டருளப் பெற்றவர். சேக்கிழார் சொல்வதையும் பாருங்கள்.

நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை
படுத்தருளி நேரேமுன்னாள்
ஆண்ட அரசு எழுந்தருளக்
கேட்டருளி ஆளுடைய
பிள்ளையாரும்
காண்டகைய பெருவிருப்புக்
கைம்மிக்க திருவுள்ளக்
கருத்திேனாடும்
மூண்ட அருள் மனத்தன்பர்
புடைசூழ எழுந்தருளி
முன்னே வந்தார்.

'நீண்டவரை வில்லியார்' எனக் குறிப்பிடுவதைச் சிந்தியுங்கள். வில் நீண்டு இருந்தாலும் கொலைக்குரிய காலத்தில் வளையும். இறைவனும் அறக்கருணை காட்டி ஆட்கொள்ளுவானாலும், குற்றங்கண்ட இடத்து மறக்கருணை காட்டியும் தடுத்தாட்கொள்வார் என்ற நயத்தை அமைத்திருக்கின்றார்.

இனி, திருஞானசம்பந்தப் பெருமானை எடுத்துக்கொள்வோம். அவர் எப்படிப்பட்டவர்? சிவபெருமானின் திருவருளாலே அம்பிகை முலைப்பாலோடு கிண்ணத்தில் ஞானக்குழைத்து ஊட்ட அமுது செய்தாராம். அதிலே ஒரு சொற்றொடரில் நமது சிந்தனையை இழுத்துச் செல்லுகிறார் சேக்கிழார். 'பெருகு ஞான வள்ளலார்' என்று. வளர் ஞானத்திற்கு எல்லை இல்லை. வளர்ந்த ஞானத்திற்கு எல்லை உண்டு; வளர்கின்ற ஞானத்திற்கும் உண்டு. ஆனால் வளரும் ஞானத்திற்கு முனனும் இல்லை; பின்னும் இல்லை. இந்த நிலையிலே அமுது செய்த பிள்ளையார் எதிர்கொண்டு அழைக்க வருகிறார்.

அம்பிகைசெம் பொற்கிண்ணத்
தமுதுண்டு
ஞானக்கொடுப்ப அழுகை தீர்த்த
செம்பவள வாய்ப்பிள்ளை
திருநாவுக்
கரசரெனச் சிறந்த சீர்த்தி
எம்பெருமக்களும் இயைந்த
கூட்டத்தில்
அரனடியார் இன்பம் எய்தி
உம்பர்களும் போற்றிசைப்பச்
சிவம்பெருகும்
ஒலிநிறைத்தார் உலகம் எல்லாம்.

இப்படி எதிர்கொண்ட காலத்து திருஞானசம்பந்தப் பெருமானுக்கு அப்பரைக் காணவேண்டுமென்ற ஆசை எல்லைகடந்து போயிற்றாம். அப்போது சிவனடியார் புடைசூழ, எதிர்கொண்டு அழைக்க முன்னே வருகிறார். அந்த நிலையைத்தான் உங்களுடைய வரவேற்பு இன்று எமக்கு நினைவூட்டுகிறது. ஒரு குருஞான சம்பந்தர் அருள்பெற்ற மகாசந்நிதானம் வருகிறார். இன்று சிவனடியார் திருக் கூட்டங்கள் எதிர்கொண்டு அழைக்கின்றன.

அன்று ஞானசம்பந்தரின் திருக்கூட்டமும் சிவனடியார் திருக்கூட்டமும் கலந்த கலப்பு, கடலும் கடலும் சேர்ந்ததுபோலத்தான். கடலும் கடலும் சேர்ந்தால் வித்தியாசம் தெரியுமா? அப்படியே சேக்கிழார் செய்யுள் நயத்தையும் நோக்குங்கள். இரண்டு கடலும் ஒன்று சேர்ந்ததாம். ஒன்று அருட்கடல்; ஒன்று அன்புக் கடல். இந்த இரண்டு கடலும்சேர்ந்த நிலை, நமது இரண்டு அடியார் கூட்டங்களும் சேர்ந்தநிலை, இதைஅப்படியே 'அருள் பெருகு தனிக்கடலும் அன்புசெறி கடலும் ஆம்' என்று, எவ்வளவு அழகாகச் சிந்தை நிறையச் சொல்லுகிறார் பாருங்கள் சேக்கிழார். நீங்கள் குருஞானசம்பந்தத்தை வரவேற்றீர்கள். உங்களுடைய அன்பு வெள்ளத்திலே அது திளைத்தது. அதற்குக் கைம்மாறு என்ன? அருள் வெள்ளம் பெற்றீர்கள். இந்த நிலையை அப்படியே வைத்து ஒரு ஞான அநுபூதிச் செல்வர் பாடுவதைப் பாருங்கள்.

திருச்சிற்றம்பலம்.

"தந்ததுன் தன்னைக் கொண்டதென்
தன்னைச் சங்கரா! ஆர்கொலோ
சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம்"

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## உருளைக்கிழங்கு வியாபாரத்திற் கிடைத்தலாபம்

கொழும்பிலுள்ள பெரிய வியாபாரியொருவர் பெரும் முதல் விட்டு அந்நிய நாட்டிலிருந்து உருளைக் கிழங்கு தருவித்தபோது கிழங்கு முழுவதும்வரும் மார்க்கத்திற்றானே பழுதுபட்டுவிட கப்பலதிகாரிகள் அதனைக் கடலுள் வீசிவிட்டனராம்; இதனால் அந்த வியாபாரிக்கு இலட்சக்கணக்கில் நஷ்டம் நேர்ந்ததாம்; வியாபாரி உருளைக்கிழங்கனுப்பிய அந்நிய நாட்டு வியாபாரிமாருக்குத் தமக்கு நேர்ந்த நஷ்டத்தைத் தெரிவித்தபோது, அவர்கள் சிறிது மனமிரங்கி, அடுத்தமுறை குறைந்த விலைக்கு உருளைக் கிழங்கு அனுப்பி வைப்பதாகவும், அவை பழுதுபடமாட்டாவெனவும் உறுதிகூறி அப்படியே அனுப்பி வைத்தார்களாம்; மூர்த்தி சேர்ந்தபொருளிழவை இந்த முறைவந்த உருளைக்கிழங்கு வியாபாரத்திற் சரிப்பண்ணலாமென நம்பியிருந்த இலங்கை வியாபாரி கிழங்கு தமக்குக் கிடைத்தபின் பார்த்தபோது நூற்றுக்கு 75 விகிதமான கிழங்கு அழுகி நாறத்தொடங்கி விட்டதாம்.

## தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம்

காலை யெழுந்து கடிமலர் தூயன தாங்கொணர்ந்து
மேலை யமரர் விரும்பு மிடம்விரை யார்மலிந்த
சோலை மணங்கமழ் சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
மாலை மதியமன் றேயெம் பிரானுக் கழகியதே.

இலங்கைக் கிறைவ னிருபது தோளு முடி நெரியக்
கலங்க விரலினா லூன்றி யவனைக் கருத்தழித்த
துலங்கன் மழுவின சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
இலங்கு மதியமன் றேயெம் பிரானுக் கழகியதே.

திருச்சிற்றம்பலம்

— அப்பர்சுவாமிகள்.

## அரிசி விநியோகப் புத்தகங்கள்

அரிசி விநியோகப் புத்தகங்களுடையோர் அப்புத்தகங்களை இழந்துவிட்டு மறு பதில் புத்தகங்களுக்கு விண்ணப்பிப்பரேல் அப்புத்தகங்களை உடனே கொடுக்காது சில காலம் தாமதித்துக் கொடுத்தல் வேண்டுமென உணவுப் பகுதி அதிகாரி உணவு மந்திரியைக் கேட்கின்றனர். கவனக் குறைவானவர்களைத் தண்டித்தற்கே இம்முறை உத்தேசிக்கப்படுகிறது. பதில் அரிசி விநியோகப் புத்தகங்களுக்கு (கூப்பன் புத்தகங்கள்) விண்ணப்பஞ் செய்வோர் மேல்வரும் விவரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்:—1 எவ்வாறு புத்தகம் இழக்கப்பட்டது, 2 புத்தகத்தை இழந்தமை பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதா இல்லையா?, 3 புத்தகத்தின்சொந்தக்காரன் சென்ற நாலு வருடங்களிலும் எவ்வெவ்விடங்களில் வசித்தார் என்னும் விவரம். இவ்விரு விஷயங்களும் உணவுப் பகுதியாரால் சிந்திக்கப்படுகின்றன எனவும் பெரும்பாலும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் அறியப்படுகிறது.

## பர்மாவிலிருந்து அரிசி வருமாம்

பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகா பர்மாவைத் தரிசித்தபோது அங்கிருந்து அரிசி ஏற்றுமதி செய்யும் விஷயமாக அத்தேச அரசாங்கத்தோடு பேசியொழுங்குசெய்ததாகவும், வருகிற ஆண்டில் பர்மா இலங்கைக்கு ஏறக்குறைய ஆறு லட்சம் தொன் அரிசி ஏற்றுமதி செய்யக்கூடுமெனவுந் தெரிவிக்கின்றார். எனினும், பர்மிய அரசாங்கம் ஏற்றுமதி செய்யக்கூடியதாய் எவ்வளவரிசி இருப்பில் வருமெனக் காட்டுதற்காகிய புள்ளி விவரங்கள் இன்னும் பூர்த்தி யாகாமையால் எவ்வளவரிசி யேற்றுமதி செய்யலாமென பர்மிய அரசாங்கத்தால் இப்போது திட்டமாய்ச் சொல்ல வியலவில்லை எனவுங் கூறினர். இன்னுமொரு மாதத்துள் இவ் விபரங் கிடைக்குமெனக் கூறப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தாரால் கேட்கப்பட்ட 60,0070 தொன் அரிசியிற் பெரும்பகுதி வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கரஷு ஐப்பசி மீ உ௨ வெள்ளிக்கிழமை

## பாகிஸ்தான் பிரதமரின் பயங்கரக் கொலை

பாகிஸ்தான் பிரதம மந்திரியான லியாகத் அலிகான் ஒரு மகாநாட்டிற் பேசத் தொடங்கும்போது, இஸ்லாமிய னொருவனால் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்து கொல்லப்பட்ட செய்தி இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளிவந்துள்ளது; இந்தப்படுகொலை பாகிஸ்தான் மக்களுக்குப் பெருந் திகிலையும் தீராக் கவலையையும் ஆக்கிவிட, சமாதான வாழ்க்கையை விரும்பும் உலக மக்களெல்லார்க்கும் இந்தச் செய்தி பெரும் மனக்குழப்பத்தை ஆக்கிவிடுமென்பதிற் சந்தேகப்பட வேண்டா; அரசர்கள், சன சமூகத் தலைவர்கள், அரசியல் ஞானிகள் இவ்வாறு பித்துக்கொண்ட சிலராற் பேடித்தனமாகக் கொல்லப்படுவரென்றால், உலகத்திலுள்ள நாடுகள் சமாதானத்தோடு வாழுங்காலம் எக்காலம்? இப்பாகிஸ்தான் பிரதமர் சுட்டுக் கொல்லப்படுதற்கு முந்தி இவரைப்போன்ற, இல்லையேல் இவருக்கு மேற்பட்ட அரசர், அதிகாரி, சனத்தலைவர்கள் இடையிடையே சுட்டுக் கொல்லப்பட்டு வந்தமையு முண்டு; ஆனால் இப்படியான அடாத செயல் துரோகச் செயல்களெல்லாம் உலக இரண்டாம் யுத்தப் போதும் அதற்குப் பிந்தியுமே அதிகமெனலாம்.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்பு, தங்கள் நாட்டின் பொருட்டும், தங்கள் தலைவரின் கட்டளைப்படியுஞ் சமர் செய்து தோல்வியுற்று எதிரிகள் கையிற் சிறையாக அகப்பட, வெற்றி யடைந்தவர்களாகிய அந்த எதிரி அரசர்கள் தம்மிடம் சிறைப்பட்டவர்களையெல்லாம் யுத்தக் குற்றவாளிகளென்று தாமே விசாரணை செய்து, தாமே மரண தண்டனையும் சிறைத் தண்டனையும் விதித்துத் தாங்களே பல வீரர்களைக் கொன்றும், சில வீரர்களை மீளாச் சிறையில் வைத்தும், என்று அக்கிரமஞ் செய்தார்களோ, அன்று தொடக்கந்தான் மனுஷனுடைய பிராணன் விலையற்றது, மாறுபட்டவுடனே, அபிப்பிராயபேதமுண்டானவுடனே எவனை இருந்தாலும் அவனுடைய உயிரை உடம்பினின்றும் பிரித்துவிடலாமென்ற கொள்கையும் துணிவும் கொலையும் ஏற்படலாயின.

“ஒருநாளு ளொருவன் இன்றில்லை யென்னும் - பெருமையுடைத்து இவ்வுலகு” எனத் திருவள்ளுவரும், “இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ திட மில்லையே” எனத் தாயுமானவரும் மனுஷன் காயம் நிலையற்றதென்பதற்கு நாள் வித்தியாசம் நியமித்தனர்; ஆனால் இப்போது செய்யப்படும் இப்படிப்பட்ட படுகொலைகளை யுத்தேசிக்கும்பொழுது, இந்த நிமிஷ மிருந்தவர் அடுத்த நிமிஷமில்லாதொழிவரென்று சொல்லக்கிடக்கின்றதல்லவா! அதிகாரம்பெற்றவுடனே, இரத்த வெறி அதிகப்பட்ட வுடனே மனுஷன் தெய்வத்தை மறக்கின்றான்; பாவபுண்ணியமென்பதை அலட்சியஞ் செய்கின்றான்; தான் நினைத்ததே சட்டமென்கிறான்; தான் நினைத்ததைச் செய்தற்கு யாரும் இடையூறாய் நின்றால் நிற்பவரைக் கெடுக்கவோ இல்லையேல் ஒழித்துவிடவோ துணிந்து நிற்கிறான்; அதனாற் பின் தனக்கு எவ்வகையான ஆபத்து நேருமென்பதைச் சிந்திக்கின்றிலன்; பாகிஸ்தான் பிரதமரை ஷேர் அக்தார் என்னும் ஒரு இஸ்லாமியனே சுட்டுக் கொன்றான்; கொன்ற அவனை அங்குநின்றோர் உடனே அடித்துக்கொன்றுவிட்டனர்; இனி என்ன நடக்குமென்பதை யார் அறிவார். உலக சமாதானத்தை இறைவனருளாற் பெற முடியுமேயொழிய அதிகாரத்தாற் பெற எவராலும் முடியாதென்பது நிசம்.

## பள்ளிக்கூடச் சிறுமியர்மேற் பழிச்சொல்

கொழும்புப் பகுதியிலுள்ள படக்காட்சிச்சாலைகட்குச் செல்லும் பள்ளிக்கூடச் சிறுமியருட் பலர், அங்குள்ள “லொக்ஸீற்” எனப்படும் பிரத்தியேக ஆசனங்களில் இருத்தற்காகிய பிரவேசச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு போயிருந்து, தம் வயசிற்கேற்பப் பல அக்கிரமங்களைச் செய்கிறார்களெனவும், குறித்த பிரத்தியேக ஆசனங்கள் மரியாதைக் குடன்பட்டு, ஒதுக்கமாக ஊடாடுகின்ற பெண்களுக்கென்றே பிரதானமாக அமைக்கப்பட்டுள்ளன வெனவும், தக்க கட்டுக்காவலோடு இச் சிறுமிகள் படச்சாலைக்கு வந்தாலொழிய, அஃதின்றி இவர்கள் வரவு விரும்பத்தக்கதல்ல வெனவும் படச்சாலை முதலாளிமார் சிலர் முறையிடுகின்றார்களாம். இந்தச் சிறுமியர் இப்படி அபவாதங் கேட்கத்தக்க விதமாக நடந்துகொள்வது இவர்களுக்கு மாத்திரமல்லாமல், இவர்கள் படிக்கும் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் அதிகாரிகளுக்கு மாத்திரமல்லாமல், இவர்கள் பெற்றார் உற்றார் உறவினர்களுக்கு மாத்திர மல்லாமல், இவர்கள் கற்ற கல்விக்குமாத்திரமல்லாமல், இவர்கள்சாதிக்கு மாத்திரமல்லாமல், பெண்பாலார்க்குமாத்திரமல்லாமல் இலங்கை மக்களெல்லார்க்குந் தீராவசையைத் தேடிவிடுமென்பதை எவருஞ் சிந்திக்க வேண்டும். “கல்லாதபேர்களே நல்லவர்கள்” என்றபிரகாரம், படிக்குஞ் சிறுமியரென்று சொல்லப்படும் இவர்களைக் காட்டிலும், இந்த விபரீதக் கல்வியறிவும் நவநாகரீகக் கொள்கையும், காட்டுக் கழுதைக்குக் கிடைத்த சுவாதீனம்போன்ற சுவாதீனமும் எள்ளளவுமில்லாராய், தங்கள் பெற்றார் பெரியார் சொற் கேட்டு அடங்கி நடக்கும் நாட்டுப்புறத்துப் பெண்பிள்ளைகள் நனிநல்லரெனலாம்; பள்ளிக்கூடச் சிறுமியர்களெனப்படும் இவர்கள் செய்யும் அக்கிரமங்களும் நெறியற்ற நடையும், நிசமானால், இவைகள் யாரைப்போய்த் தாக்கும்? ஐம்பதுக்கைம்பது விகிதம் இவர்கள் பெற்றாரையும் பள்ளிக்கூட ஆசிரியர்களையுந் தாக்குமன்றோ! படக்காட்சிச் சாலையில் மாத்திரமல்ல, பஸ் மார்க்கமாகவும் புகைரதமார்க்கமாகவும் இச் சிறுமியர் காலந்தோறுந் தங்கள் கலாசாலைக்குப் போய்வரும் வேளையிற் பல பழிமொழிக்கும் ஆபத்திற்கும் ஆளாகின்றார்களாமே! புதினப் பத்திரிகைகளில் இடையிடையே வரும் புதினங்களென்ன? ஒரு மாணவி ஒரு வாலிபனைக் காதலித்தாள்; மாணவன் மாணவியைக் காதலித்தான்; நாளடைவிற் பரஸ்பரம் காதல்மூண்டது; இருவரும் தாங்கள் தம்பதிகளாதற்குத் தத்தம் பெற்றாரிடம் தனித்தனி அநுமதி கேட்கிறார்கள்; மூடப்பெற்றார் சிலர் அநுமதிகொடுக்க மறுத்துவிட, காதலன் சில சமயத்தில், தான் செய்யுந் தற்கொலைக்குக் காரணமென்ன வென்பதைக் குறித்து வைத்துவிட்டு, நச்சுத் திராவகத்தை உட்கொண்டு உயிர் விடுகிறான்; காதலி மனவைராக்கியங்கொண்டு ஆற்றுட் குளத்திற் கிணற்றுட் குதித்து உயிர் விடுகிறாள்! இவைகளுக்கெல்லாங் காரணமென்ன? இக்காலத்திலே பெரும்பாலும் வித்தியாசாலைகளிற் பிள்ளைகட்கு ஆவசியகம் வேண்டிய நீதி நூற்கல்வி, சமய நூற்கல்வி, ஒழுக்கத்திற்குரிய அறிவு ஊட்டப்படாமையேயாகும். மேலும் இக்காலத்திலே சிறுமியரை, கன்னிப்பெண்களைப் பெற்றாராயுள்ளவர்கள் தக்க துணையோடு போக விடுதலின்றி, அந்தச் சிறுமியர்களையே ஒருங்கு சேர்ந்துபோக அநுமதி கொடுத்துவிடுதலேயாகும். பள்ளிக்கூடச் சிறுமியர் செய்யும் பிழைகள் அப் பள்ளிக்கூட ஆசிரியர்களாலே திருத்தப்படுவதொழிய வேறு வகையினால் திருத்தப்படுதல் இலகுவல்ல.

## பாகிஸ்தான் பிரதம மந்திரி சுட்டுக் கொல்லப்பட்டார்

சென்ற செவ்வாய்க்கிழமை (16-10-51) பிற்பகல் 4 மணி வரையில் ருவல்-பிண்டி யென்ற இடத்தில் நிகழ்ந்த முஸ்லிம் மக்கள் கூட்டத்தில் தலைமை வகித்தற்கு பாகிஸ்தான் பிரதம மந்திரியாகிய திரு. லியாகத் அலிகான் சென்றிருந்தார். அங்கு 2000 சனங்கள் வரையிற் கூடியிருந்தனர். குறித்த மந்திரி மேடையிலெழுந்துநின்று சில வார்த்தைகள் பேசுவதற்கிடையில் சமீபத்தில் நின்ற ஒருவன் சுழற்சிக் கைத்துப்பாக்கியால் இருமுறை சுட்டானாம். இரண்டு குண்டுகளும் மந்திரியின் மார்பில் தைத்ததும் அவர் அவசமாகி விழுந்தார். உடனே விமான மார்க்கமாக கராச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சிறிது நேரத்தில் ஆவி துறந்தார். சுட்டவன் தப்பியோட எத்தனித்தபோது, அங்குக் கூடிநின்ற சனங்கள் அவனைத் தொடர்ந்து பிடித்து உடனேயே அடித்துக் கொன்றுவிட்டனராம். மந்திரியின் வயசு 56.

## சமய தீட்சை

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில், மேற்படி கல்லூரிச் சைவ மாணவர் சேவா சங்கத்தாரின் ஆதரவில், வருகிற ஞாயிற்றுக்கிழமை (21-10-51) காலை 7 மணி தொடக்கம் சமயப் பிரவேச தீட்சை நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## கோணேஸ்வரத் திருவுருவங்கள்

### பேராதனையில் வரவேற்பு

மேற்படி திருவுருவங்கள் 14-10-51 ஞாயிற்றுக்கிழமை மாலை கண்டி - கடுகண்ணாவ வழியாய்க் கம்பளைக்கு ஊர்வலமாகச் செல்கையில் பேராதனையில், புகைரதச்சந்தி அதிபர் திரு. வ. இராஜநாயகம் தலைமையில் ஆயிரக் கணக்கான சனங்களால் வரவேற்று ஆராதனைகள் செய்யப்பெற்றன. ஈரியகம அரசினர் வைத்தியசாலை முகப்பிலிருந்து வாழை, கமுகு, மகர தோரணங்கள், மின்சார தீபாலங்காரம் கோலாட்டம் முதலிய வரிசைகளோடு பேராதனை அரசினர் தமிழ் வித்தியாசாலைக்கு எழுந்தருளச்செய்யப்பெற்று அங்கு விசேட பூசை முதலியன நடைபெற்றபின் யாவருக்கும் பிரசாதம் வழங்கப்பெற்றது.

— கடித

## அரச தம்பதிகளின் இலங்கை விஜயம்

எலிசபெத் இளவரசியும் எடின்பரோ கோமகனும் வருகிற 1952-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14-ந் தேதி இலங்கைக்கு வருவார்களென பக்கிங்காம் அரண்மனையிலிருந்து வெளிவந்த அறிவித்தல் ஒன்று கூறுகிறது. அரச தம்பதிகள் இலங்கை அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்ட வரவழைப்பை மனமகிழ்வுடன் ஏற்றுக்கொண்டதாக அறிவிக்கின்றனர், ஜோர்ஜ் மன்னரும் அரசியும் இலங்கை விஜயஞ் செய்தற்கென நியமிக்கப்பட்டிருந்த தினமாகிய பெப்ருவரி 14ந் தேதியன்றே இளவரசியுங் கோமகனும் இங்கு வந்து தங்கி பெப்ருவரி 21-ந் திகதி இங்கிருந்து புறப்படுவார்கள்; இவர்கள் இங்கு தங்கியிருக்கும் வாரத்தில் யாழ்ப்பாணம், காலி, கண்டி முதலிய மாகாணத் தலைநகரங்களையும் பிற இடங்களையும் தரிசிக்கக்கூடுமெனவும் அறியப்படுகிறது.

# சிவஞானபோதச் சொற்பொழிவு

—— திரு. V. P. காந்திமதிநாதபிள்ளை அவர்கள் ——

முதல்வன் அவ்வுயிர்களோடு
உடனும் நிற்பன்

இறத்தல் பிறத்தல் புரியும் அவ்வுயிர்களோடு முதல்வன் ஒன்றாய் நிற்றல் மாத்திரமன்றி வேறாயும் நின்று உபகரிக்கிறானென்று சொன்னோம். உயிர்கள் இறத்தல் பிறத்தல்புரிதற்கு மேற்கூறிய இரண்டுவித உபகாரங்கள் மாத்திரம்போதுமா? வேறுவித உபகாரமும்வேண்டுமா? என்பதை ஆராய்வாம். கண் ஒரு பொருளைக் காணுதற்கு அக்கண்ணோடு ஒன்றாய்நின்று உபகரித்தலாகிய உயிரின் உபகாரமும், அக்கண்ணுக்கு வேறாகநின்று உபகரித்தலாகிய அருக்கன் உபகாரமும் ஆக இரண்டு உபகாரங்கள் மாத்திரம் போதா. இவ்விருவித உபகாரங்களிருப்பினும் கண்ணுக்கும் பொருளுக்கும் இடையே, யாதானுந் தடையிருப்பின், அக்கண்ணில் உயிருணர்வோடு அப்பொருளொளியும் உடன் கலக்குமாறில்லை; அக்கண் அப்பொருளைக் காணுமாறில்லை. அதாவது கண் ஒரு பொருளைக் காணுதற்கு உயிர் அக்கண்ணோடு கண்ணாய் நிற்றலாகிய உபகாரம்; அருக்கனது உபகாரம், அப்பொருளொளியும் உயிருணர்வும், அக்கண்ணில் உடன்கலத்தலாகிய உபகாரம் ஆகிய மூவித உபகாரங்களும் வேண்டப்படும். உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டும் முதல்வனால் இம்மூவித உபகாரங்களும் செய்யப்படல் வேண்டும். அதாவது அவ்வுயிரோடு ஒன்றாய் நிற்றல், வேறாய் நிற்றலாகிய உபகாரங்களோடு, உடனாய் நிற்றலாகிய உபகாரமும் செய்யப்படல்வேண்டும். இவ்வுபகாரத்தையும் முதல்வன் இறத்தல் பிறத்தல் புரியும் எல்லா உயிர்களுக்கும் செய்து வருகின்றான். இக் கருத்தையே இச்சூத்திரம் '(உயிர்கள்) போக்குவரவு புரிய (முதல்வன்) அவையே தானேயாய் நிற்கும்என இயைபுற உணர்த்தியது.

முதல்வன் அவ்வுயிர்களோடு
அத்துவிதமாய் நிற்பன்

முதல்வன் இறத்தல் பிறத்தல் புரியும் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பனென்றோம். முதல்வனாகிய ஒரு பொருளிடத்து இம் மூவேறு தன்மைகளும ஒருங்கு கூடி இருத்தலெப்படி? என்பதை ஆராய்வாம். அரக்கை உருக்கி அதனொடு கற்பொடி சேர்த்துச் சாணை செய்யப்படும். இச் சாணையிற் கல் அரக்கோடு உடன் விரவிக் கிடக்கின்றது. இவ்விரண்டும் தன் தன் தன்மையிற்குறைவுபடவில்லை. சேர்த்துப் பிடிக்குந் தன்மையாகிய அரக்கின் தன்மையும், கத்தியினைக் கூர்மைப்படுத்துந் தன்மையாகிய கல்லின் தன்மையுமாகிய இரண்டு தன்மைகளுஞ் சாணையிற் காணப்படுகின்றன. இச் சாணையிற் கல் தன் சுபவடிவத்திற் காணப்படாது அரக்கோடு அரக்காய்க் காணப்படுகின்றது. எனவே சாணையென்னும் ஒருபொருளின் மூவேறு தன்மைகள் ஒருங்கு கூடியிருக்கக் காண்கிறோம். அதுபோலவே முதல்வன்பாலும இறத்தல் பிறத்தல் புரியும் உயிர்களோடு ஒன்றாந் தன்மை வேறாந்தன்மை உடனாந்தன்மையாகிய மூன்று தன்மைகளும் ஒருங்கிருத்தல் கூடும். இம் மூவேறுதன்மைகளின் சேர்க்கையே 'அத்துவிதத் தன்மை' எனப்படும். இத் தன்மையோடு கூடினே முதல்வன் அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு உபகரிக்கின்றான். இவ்வுபகாரத்தைப் பெத்த உயிர்கட்கு மாத்திரமன்றி முத்த உயிர்கட்குஞ்செய்துவருகின்றான். ஆணவமலத்தன்மை நீங்கப்பெற்ற உயிர்களே முத்த உயிர்களெனப்படும். இம்முத்த உயிர்கள உலகப் பொருள்களை புசித்து வினையினை ஈட்டுதல் இல்லை; இறத்தல் பிறத்தல்களைப் புரிவதுமில்லை. என்றாலும் இம் முத்த உயிர்கட்கும் முதல்வனது அத்துவித உபகாரம் வேண்டப்படுவதில்லை என்பதின்று. ஆனால் பெத்த உயிர்கட்கு முதல்வனாற் செய்யப்படும் அத்துவித உபகாரமும் வேறு வேறாம். பெத்த உயிர்கட்கு இவ்வுலகப் பொருள்களை அறிந்தனுபவித்தற் கண் முதல்வன் அத்துவிதமாய் நின்று உபகரிக்கின்றான். முத்த உயிர்கட்குப் பரம்பொருளாகிய தன்னை அறிதற் கண் அவ்வாறு நின்று உபகரிக்கின்றான். முத்த உயிர்கட்குச் செய்யப்படும் அத்துவித உபகாரம் பின்னர் விளக்கப்படும். இச்சூத்திரத்து விளக்கப்படுவது, பெத்த உயிர்கட்கு உபகரித்தற்பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களோடு கொண்டுள்ள அத்துவிதக் கலப்பின் தன்மையே. இத் தன்மையை உணர்த்தவே இச்சூத்திரம் முதல்வன் அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் நிற்குமென இயைபுற உணர்த்தும்.

இனி, அத்துவிதம்என்னும் சொல்லின் பொருளை ஆராய்வாம். இவ்வத்துவிதச் சொல் அ, துவிதம் என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு சொல். இவற்றுள் 'அ' என்னும் சொற்கு இன்மை, அன்மை, மறுதலை என்னும் மூன்று பொருள்கள் இலக்கணநூலிற் படிக்கப்படும். இச்சொல் 'ரூபம்' என்னுஞ் சொல்லோடுகூடி 'அரூபம்' என்றாகி ரூபமின்மையை உணர்த்தும். 'தர்மம்' என்பதனோடு கூடி 'அதர்மம்' என்றாகித் தர்மத்தின் மறுதலையை உணர்த்தும். இவ்வாறன்றி யாதானும் எண்ணுச் சொல்லோடு கூடில், மேற்சொல்லிய இன்மை மறுதலைப் பொருள்களை உணர்த்துதல் வழக்கின் கண் இன்று. அக்காலத்து அன்மைப் பொருளை உணர்த்துதலே வழக்கின்கண் உண்டு. இவ் வழக்கினை 'அநேகம்' என்னும் சொல்லால் அறியலாம். அவ் வழக்கின்படி 'அத்துவிதம்' என்னுஞ் சொற்கு இரண்டன்மை பொருள். இரண்டின்மையாகிய ஒன்று என்பது பொருளன்று. ஒன்று என் என்னும் பொருளை 'ஏகம்' என்னும் சொல்லே உணர்த்தும். 'ஏகம்' 'அத்துவிதம்' என்னும் சொற்களிரண்டும் ஒன்று என்பதையே உணர்த்துமென்றல் பொருத்தமன்று. உணர்த்துமேல் "ஏகமேவ அத்துவிதீயம் பிரமம்" என்று சுருதியிற் சேர்ந்து வரக் காரணமில்லை. ஒரே பொருளாகிய பிரமம் வினைப்பொருள்களில் இரண்டறக் கலந்து நிற்கும் என்பதே இச்சுருதிக்குப் பொருள்.

---

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை ரோட்டில் 284-ம் நம்பர் கடையில் அடைவு பிடிக்கும் கா. ந. இளையதம்பியிடம் 1947-ம் ஆ செப்டெம்பர் மீ 15-ந் உ தொடக்கம் 1950 ஆ செப்டெம்பர் மீ 30-ந் உ வரை வைத்து மீட்கப்படா அடைவுகளை 1951-ம் ஆ நவம்பர் மீ 3-ந் உ சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் கடையில் ஏலத்தில் விற்கப்படும்.

போ. இராசரத்தினம்
ஏல விற்பனவுகாரர்

யாழ்ப்பாணம்
17—10—51.

M 118 19, 28—10—51.

---

## திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி சனி அக்டோபர் 20**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 டி கே தங்கமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 ஆங்கிலப்பேச்சு 2 தமிழில் செய்தி 2 10 சர்வகலாசாலைகளுக்கு 2 30 சித்ரகானம்* 2 45 முடிவு.

மாலை 5 30 ஜலதரங்கம் ஆ இ கோவிந்தன் 5 45 இசைப் பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 மைசூர் டி சௌடையா வயலின் எஸ் வி எஸ் நாராயணன் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 ப்ரஸன்குமார் பானர்ஜி ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு அக் 21**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி கதம்ப நிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 வாத்ய இசை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குரல்வகை* 2 தமிழில் செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசை நிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 திருவாரூர் பாலுசாமி தீக்ஷிதர் வீணை 5 45 டி ஆர் சந்தானம் பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 ஞானசௌந்தரி* 7 45 பெயர் விநோதம் கே பிரியலோசனை —பேச்சு 8 காசம்மாள் சிவகுருநாதன் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 திருவாரூர் பாலுசாமி தீக்ஷிதர் வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் அக். 22**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கோயமுத்தூர் வி ராஜலக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 நாதமுனி பாண்ட்* 2 தமிழில் செய்தி 2 10 அப்துல் அஜீஸ்கான் விசித்ர வீணை* 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 வி வேணுகோபால் கிளாரினெட் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சிரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 கோயில் கலைச் செல்வம் 8 தானவாத்ய கச்சேரி 8 30 எஸ் ஜி கிட்டப்பா* 8 45 ஆங்கிலப் பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கோயமுத்தூர் வி ராஜலக்ஷ்மி பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் அக் 23**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 எ எஸ் மஹாதேவன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேளை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 வீணை* 2 தமிழில் செய்தி 2 10 பாரோகோஷ்டி பீன்* 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 தர்மபுரம் எம் அபிராமிசுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 எ எஸ் மஹாதேவன் பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 டி கே பட்டம்மாள் பாட்டு திருவெள்ளூர் சுப்ரமணியம் வயலின் பாலக்காடு குஞ்சுமணி மிருதங்கம் கிருஷ்ணவாம் வைத்தியநாதன் கடம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 தர்மபுரம் எம் அபிராமிசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

---

## நமது சோதிடப்பகுதி

— ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது —

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (21-10-51—27-10-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

பணவிஷயத்திலும், எதும் கருமத்திற் பணமிடும் விஷயத்திலும் அவதானமாயிருத்தல் வேண்டும். பொறுப்புக்களொன்றையும் ஏற்கவொண்ணாது. குடும்பத்திற் சங்கடம், இல்லையேற் குடும்பத்திற் சுகவீனம் நேரக்கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்.

வாழ்க்கையிலே இது ஒரு பிரதான வாரம். நீடித்தகாலம் எதிர்பார்த்திருந்த தன்மைக்காகிய மாறுதல்கள் ஏற்படும். புதிய திட்டத்தை ஊக்கத்துடன் செய்க. ஆரம்பத்திற் சொற்பபணச்செலவுநேரும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

அதிக முயற்சி செய்தால் அற்ப பலனுண்டாகும். சுற்றமித்திரரால் சகாயமுண்டு. மனச்சாந்தியில்லை. ஏதுமொரு விஷயத்தைவிட்டுக்கவலையடையநேரும்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

அனுகூலமுள்ள வாரம். சனசமூக முயற்சிகளிற் பொருள் செலவிடநேரும். வியாச்சியத் தொடர்பிருந்தால வெற்றியுண்டாம். கிழமை முடிவிற் பணலாபமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் எவரோடும் பிணக்கநேரும். ஆனால் அதனாற் பெரும்பிழை வாராது. பிறரால் பெருமுதவியுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

பெரியோர் பெருமுதவிசெய்வர். இதுவரையில் விவாகமில்லையானால் விவாகப் பேச்சுண்டு. சில தூதனம் விளையவேண்டிய வாரம்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

பிரதான கருமத்திற் பிணக்கும் குழப்பமும் நேரக்கூடும். கோட்சொல்வோரே இவற்றிற்குக் காரணமாவர். உத்தியோகத்திற் சங்கடம் சுகயீனம் என்னுமிவைகள் நேரக்கூடும்.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

கிழமையின் முதலிரு தினமும் சாவதானமாக நடந்துகொள்க. மனரம்மியமான லாபமுண்டாம். குடும்ப ஐக்கியம், காரிய சித்தி முதலியன கிழமை முடிவிலுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

வாரத்தின் முற்பகுதியில் அவதானமாக நடந்துகொள்க, உத்தியோகத்தில் அற்ப பிணக்கு, மனக்கிலேசம் என்னுமிவைகள் விளையும். கிழமையின் பிற்பகுதியில் பணலாபமும் மன ஆறுதலுமுண்டு.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

ஒழுங்கு செய்யவேண்டிய கருமங்களைப் புதன்கிழமைக்கு முந்திச் செய்துகொள்க, புதன்கிழமை தொடக்கம் சனிக்கிழமைமுடியச் சாவதானமாக நடந்துகொள்க. அந்தரங்க சத்துருக்களாற் சங்கடம் விளையக்கூடும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

கடைசி நாளொழிய இவ் வாரத்தில் ஏனைய நாட்கள் நல்லன. புதிய கருமங்களிற் சித்தியுண்டு, புகழுமுண்டு. சிலகாலமாகக் கவலைக்கிடமாயிருந்த சில கருமங்கள் நிர்ச்சயமாக முற்றுறும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இவ் வாரம் முழுவதும் உத்தியோக விஷயத்தில் அவதானமாக நடந்துகொள்ளவும். சிநேகரோடு மாறுபடவொண்ணாது. பிரதானகருமங்களை இவ்வாரத்திலே தொடங்கவேண்டாம்.

## வைத்திய சுகாதாரப் பகுதி

### வைத்திய சுயபாஷை தாதி மாணவிகளின் பயிற்சிவகுப்பு

மேற் காணும் பயிற்சி வகுப்பிற்கு அனுமதிப்பதற்கு மாணவிகள் தேவை. இது சம்பந்தமாக முழு விபரங்களையும் அக்டோபர் மாசம் 12-ந் திகதி வெளியாகும் அரசாங்க (கெசற்) பத்திரிகையில் காணலாம்.

G. 38 16, 19—10—51.

## கேள்விப் பத்திரங்கள் (Tenders)

முல்லைத்தீவு ஐக்கிய விளைபொருள் விற்பனவுச் சங்கத்துக்குத் தானியங்கள் சேமித்து வைக்கும் பண்டசாலைக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப விரும்புவர்கள் இந்த 1951-ம் ஆண்டு அக்ரோபர் மாதம் 30-ந் தேதி பகல் 2½ மணிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவேண்டுமென வடமாகாண ஐக்கிய சங்கங்களின் உதவிப் பதிவுகாரியஸ்தர் கேட்டுக்கொள்கின்றனர்.

ஒப்பந்த விண்ணப்ப மாதிரிப்பத்திரங்கள் யாழ்ப்பாண ஐக்கிய சங்கங்களின் உதவிப் பதிவுகாரியஸ்தரின் கந்தோரிற் பெற்றுக்கொள்ளவேண்டும். குறித்த பதிவுகாரியஸ்தரிடமிருந்தே மேற்படி கட்டடத்தின் விபரம் முதலியன அறியலாகும். கட்டடத்தின் படம் மேற்படி கந்தோரிற் பார்க்கலாம். கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளாயிருக்கவேண்டும். மேலும் எந்தக் கச்சேரியிலாயினும் ஐம்பது ரூபா கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைக் கொடுத்து ஒப்பந்தமாதிரிப் பத்திரங்களை 24-10-51-ந் தேதி 4½ மணிக்குப் பிந்தாமல் குறித்த பதிவுகாரியஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த கேள்விப் பத்திரகாரர் தாங்கள் ஏற்கும் வேலை ஒப்பந்தத்தைத் தவணை தப்பாமல் முடித்துக் கொடுக்கும் திறமை முதலியவற்றில் மேற்படி பதிவுகாரியஸ்தரைத் திருப்திப்படுத்த வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்க முறைப்படி எழுதிச் 'சீல்' நுட்டுக் காரியஸ்தருக்கு அனுப்பப்பட்டாலொழிய கேள்விப் பத்திரத்தின்பொருட்டுக் கட்டப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

R. C. S. Cooke.
யாழ்ப்பாண ஐக்கிய சங்கங்களின் உதவிப் பதிவு காரியஸ்தர்.

ஐக்கியசங்கக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்,
8-10 51

110 12, 16, 19—10—51

## திருவடி

1-ம் பக்கத்தொடர்ச்சி

பெற்றேன் யாது நீ பெற்றதொன்றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய் யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே."

திருச்சிற்றம்பலம்.


இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= o =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.



திறமான தேக்க மரங்கள் பல நீளங்களிலும்

திறமான குணிமார்க் ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
யாழ்ப்பாணம்

Std 2



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எசசந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
பிரப்பர்.

Std. 14 20-11-46—20-11-19



# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜ்ரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
கால்றுத்தல் விலைரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
நி 1. தட்டாதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு

எமதுவிலாசம்

M 92


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai, Jaffna, on Friday October 19, 1951

## வடமாகாணச் சித்த வைத்தியப் பிரதிநிதி

மேற்படி சித்த வைத்தியப்பகுதிப் பிரதிநிதியாக இதுகாறும் கடமையாற்றிய திரு. கே. எஸ். பரிபூரணனந்தா இந்த மாசம் 11-ந் திகதியோடு முற்றாக விலகவேண்டி நேர, யாழ்ப்பாணம பிரபல வைத்திய பரம்பரையினராகிய திரு. மு. கதிரவேற்பிள்ளை மேற்படி வைத்தியப்பகுதிப் பிரதிநிதியாக நியமனம் பெற்றிருக்கிறாரெனச் சுகாதாரப் பகுதியின் நிரந்தரக் காரியதரிசி அறிவித்திருக்கின்றார்.

## புங்குடுதீவு தமிழ் இளைஞர் கழகம்

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் எழுத்தாளர் பொன். த. நாவேந்தன் தலைமையிற் காந்தி ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தலைவரும், திருவாளர்கள் சி. மகாலிங்கம், த. துரைசிங்கம் ஆகியோரும் காந்தியடிகளின் அன்பு வாழ்க்கையைப்பற்றிப் பாராட்டிப் பேசினர். குறித்த இளைஞர்களின் விருத்தியை முன்னிட்டு மேற்படி நாவேந்தனைத் தலைவராகக் கொண்ட இளைஞர் கழகம் ஒன்று நிறுவப்பெற்றது.

— கடிதம்

## வண்ணை கோம்பையன்மணல் மயானபரிபாலனசபை

இச் சபையின் 19-ம் வருடாந்தக் கூட்டம் நிகழும் 1951-ம் ஆ. அக்டோபர் மீ 24-ந் திகதி புதன்கிழமை சாயந்தரம் 5 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் யாவரும் சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

| | |
|---|---|
| R. சிவகுருநாதர் | S. P. இராசையா |
| | C. நடராசா |
| தலைவர் | கௌரவநிலைக் |
| யாழ்ப்பாணம், | காரியதரிசிகள். |
| 15-10-51. | |

நிகழ்ச்சிகள்:

1. சென்றகூட்ட வரலாறு வாசித்தல்.
2. தனாதிகாரியின் வரவு செலவுக் கணக்கு.
3. உத்தியோகஸ்தர் தெரிவு.
4. தீர்மானங்கள்:—
   (அ) "இச் சபையை அரசாங்கம் பதிவு செய்தால் மயான வளர்ச்சிக்கு அனுகூலமென்று இச் சபை அபிப்பிராயப்படுகிறது"
   (ஆ) ஓர் பாடை வண்டி அத்தியாவசியமாதலால் இதைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற வழி வகைகள் கையாளப்படவேண்டும்"
   (இ) மயானத்தில் ஓர் விறகுக் காலை ஸ்தாபனம் செய்தல் அங்கு தகனம் செய்வோர்களுக்கு வசதியாயிருக்குமென்று இச் சபை தீர்மானிக்கின்றது".

M. 113 16, 19, 23—10—51


L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE



தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.